**வாக்குமூலம்**

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். C.C. 139/2022

வழக்கு சாட்சி- **அ.சா. 6**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | ராமமூர்த்தி | : | | |
| தந்தை/கணவர் பெயர் | நீலமேகம் | : | தொழில் | விவசாய வேலை |
| கிராமம் | வடுகன் புதுப்பட்டி | : | | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 42/2024 |

**( 1ம் எதிரி ஆஜர். 2 முதல் 6 வரையுள்ள எதிரிகள் ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )**

**நாள் : 09.01.2025**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக அரசு தரப்பில் பாவிக்க கோரி, அனுமதி கேட்கப்பட்டது, அனுமதி வழங்கப்பட்டு , நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 04.12.2018 ம் தேதி அன்று மதியம் நானும், தர்மராஜும் வேலைக்கு சென்றபோது சிங்காரவேலு என்பவர் வீட்டிற்கு பின்புறம் பூதலூர் போலீசார் சண்டை நடைபெற்றது குறித்து விசாரணை செய்து கொண்டு இருந்தார்கள்

என்றால் சரியல்ல. அங்கு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும் தர்மராஜும் கையெழுத்து செய்தோம் என்று போலிஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்து, எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசுதரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.**